www.tamilarangam.net




# ஈழ மாணவர் குரல்

அக்டோபர்_85. GUES குரல் - 4


சாகும் வரை உண்ணா விரதம்

## அன்று பொபிசான்சும் அவனது தோழர்களும் இன்று
# ஈழப்போராளிகளும், மாணவர்களும்.

**வெலிக்கடை சிறைச்சாலையல்ல; அது ஒரு கொலைக்கூடம். 1983 ஜூலை 24-27 இரத்தம் தோய்ந்த இந்த நாட்களை ஈழப்போராட்ட வரலாறு கோபத்துடன் குறித்துக் கொண்டது.**

**இந்த நாட்களில்தான் வெலிக்கடை கொலை முகாமில் தேசவிடுதலைக்காக போராடிய மனிதர்களின் குரல்வளைகள் அறுக்கப்பட்டன. விடுதலை வெளிச்சத்தைத் தரிசிக்க விரும்பிய கண்கள் வெறியர்களால் தோண்டப்பட்டது. புத்தனின் பீடம் போராளிகள் குருதியால் கழுவப்பட்டது. இந்த மிலேச்சத்தனமான வெறியாட்டத்திற்கும், வேட்டையாடலுக்கும் தானே மூலகாரணமாக இருந்தது என்ற உண்மையைச் சிறீலங்கா கொலை பாதக அரசினால் மூடி மறைத்திட முடியவில்லை. இந்த உண்மை அம்பலமானதால் கொலைக் கூடங்களில் வைத்துக் கைது செய்யப்படும் ஈழத்தவர்களைக் கொன்று குவிப்பதைச் சிறீலங்கா அரசு நிறுத்திவிடும் என்பதை நினைத்தும் பார்க்க முடியாது**

வந்துகொண்டிருக்கும் செய்திகள் சிறீலங்கா வதை முகாம்களில் கொல்லப்படும் ஈழத்தவர் பட்டியல் நீண்டு செல்வதை வெளிப்படுத்துகின்றன.

தப்பி ஓடுங்கள் என்று துப்பாக்கிமுனையில் விரட்டப்பட்டு அப்படி ஓடும் வேளைகளில் துப்பாக்கி குண்டுகளால் துளைக்கப்படும் ஈழ வாலிபர் உடல்கள் கொலைக்கூடங்களில் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தப்பி ஓட முயற்சித்ததால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றமற்ற இந்த மனிதர்கள் மீது சிறீலங்கா அரசு வீண்பழி சுமத்துகிறது.

**அண்மையில் மீண்டும் ஒரு வெலிக்கடை—தங்காலை வதை முகாமில் சிறீலங்கா கொலைப் பட்டாளங்களின் வெறியாட்டத்திற்கு 6 ஈழ வாலிபர்கள் பலியாகினர்.**

வெலிக்கடைப் படுகொலை பாணியில் சிறீலங்கா அரசின் காட்டு மிராண்டித் தனங்கள் **தொடர்வதை** தங்காலைச் சிறைப் படுகொலைகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

இந்த நிலையில் பகைவனின் கொலைக் கூடங்களில் மரணத்துடன் வாழும் ஈழப் போராளிகளும், மாணவர்களும். **விசாரணை முடிந்தவர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய்** என்ற கோரிக்கையுடன் **சாகும் வரை உண்ணாவிரதப்** போராட்டத்தை ஆரம்பித்து உள்ளனர்.

சிறீலங்கா பௌத்த சிங்கள இனவாத அரசு தனது கீழ்த்தரமான ஒடுக்கு முறைகளுக்கும், தேசிய இன அழித் தொழிப்பு நடவடிக்கைகளுக்கும் சட்ட வியாக்கியானம் அளித்து வருகிறது.

பயங்கர வாதச் தடைச் சட்டம், அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் போன்ற மனித உரிமைகளை கொலை செய்யும் தனது அடக்கு முறைச் சட்ட விலங்குகளால் கைதுசெய்யப்படும் ஈழமக்களை பிணைத்து வரும் சிறீலங்கா அரசு இப்போது தான் வகுத்த சட்ட திட்டங்களையும் மீறியுள்ளது.

பயங்கர வாதத் தடைச் சட்டத்தின்படி கைது செய்யப்படும் ஒருவரை சந்தேகத்தின் பேரில்விசாரணையின்றி18 மாத காலம் தனது வதைமுகாம்களில் சிறீலங்கா அரசு அடைத்து வைக்க முடியும். ஆனால் இப்போது 18 மாதங்கள் கடந்த பின்னரும் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவோ, விசாரணை நடத்தவோ சிறீலங்கா அரசு முன்வரவில்லை.

சிறீலங்கா அரசின் அலட்சியப் போக்குக்கும், அதிகாரத்துவ ...ட முறைகளுக்கும், சிறைக் கொடுமைகளுக்கும் முடிவுகட்ட சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பதென்று வெலிக்கடை சிறையிலுள்ள தமிழ்ப் போராளிகளும் மாணவர்களும்முடிவுசெய்தனர் போராட்டத்தில் குதித்தும் விட்டனர்.

இருவர், இருவராக இப் போராட்டத் தில் குதிப்பதென்று அவர்கள் முடிவெடுத்துள்ளனர். இதில் முதற் கட்டமாக பேராதனை விஞ்ஞான பீட மாணவர் சுரேஷ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை கனகரத்தினம், மலையகத்தைச் சேர்ந்த கருணாகரன் ஆகியோர் ஆகஸ்ட் 8 ம் தேதி முதல் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஆக்கிரமிப்பாளரின் கொலை முகாம்களில்போராடிக் கொண்டிருக்கும் இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவும் அவர்களை விடுதலை செய்யுமாறு வற்புறுத்தவும் யாழ்ப்பாணத்தில் பரவலான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ் பல்கலைகழக மாணவர்களும் கட்டம், கட்டமாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

**அன்று** ஐரிஸ் சிறைக் கொட்டடிகளில் தம்மை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக் கோரி **பொபி சான்சும், அவனது தோழர்களும்** சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது நோக்கங்கள் வெற்றி பெறுவதற்காக இறுதிவரை போராடிய பொபி சான்சும் அவனது தோழர்களும் மரணமடைந்தனர். ஜனநாயக உரிமைகளை மிதித்து துவைத்தபடி ஜனநாயகம் பற்றி சொல்லடுக்குகளை வாரிவீசும் அதன் உண்மைச் சொரூபத்தை பொபி சான்சினதும், அவனது தோழர்களதும் மரணத்துடன் உலகம் உணர்ந்து கொண்டது.

இன்று சிறீலங்கா ஆக்கிரமிப்பாளரின் கொலைக் கூடங்களில் போராடிக் கொண்டிருக்கும் ஈழப் போராளிகளும் சாவு முனையிலும் உறுதி தளராமல் கட்டம், கட்டமாக போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

இந்த நேரத்தில் உலகெங்கும் இருக்கக் கூடிய ஈழப்போராட்ட ஆதரவு அமைப்புகளும், ஈழமக்களும் சிறீலங்கா அரசின் சிறைக் கொடுமைகளை விளக்கியும், சாவு முனையிலுள்ள போராளிகளின் நிலையை தெரியப்படுத்தியும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் உலகின் கவனத்தை சிறீலங்கா அரசின் இருண்ட சிறைகளை, கொலைக் கூடங்களை நோக்கி ஈர்க்க வேண்டும்.

பூட்டிய சிறைக்குள் கொடுமைப் படுத்தப்படும் ஈழத்தவர்கள் நிலையை உலகம் உணரட்டும். வெஞ்சிறைகளுக்கும் வளையாத உறுதியுடன் நிமிர்ந்து நிற்கும் போராளிகளை நோக்கி, அவர்களை விடுதலை செய்யக் கோரி உலகின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளைப் போராடத் தூண்டுவோம். நாமும் போராடுவோம்.

## கொலை முகாமிலிருந்து ஒரு கடிதம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கட்கு,


மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். எம்மீது திணிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மிகவும் கொடுமையானவை. அதைவிட இப்போது புதிய, புதிய சட்டங்களை தம்மிஷ்டம்போல் நிறைவேற்றி எம்மிடம் திணிக்கிறார்கள். அதற்கும் மேலாக சட்டங்களையும் மதியாது 18 மாதங்கள் முடிந்த பின்பும் இங்கு சிலரைத் தடுத்து வைத்துள்ளனர். அவர்களுக்கெதிராக வழக்கோ அல்லது வேறு எவ்வித நடவடிக்கைகளுமோ எடுக்காது 18 மாதங்கள் முடிந்த பின்பும் பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இதுபற்றி நிர்வாகத்திற்கும், மேலிடங்கட்கும் அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக பாதுகாப்பு அமைச்சிற்கு எங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை 8-8-85 தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை நீண்ட இடைவெளி கொடுத்து அறிவித்தும் அதற்கு எவ்வித முடிவும் கிடைக்கவில்லை. மேற்கூறியபடி 8—8—85 தேதி போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது. கோரிக்கை விசாரணை முடிந்தவர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய். இதில் இரண்டிரண்டு பேராக போராட்டத்தில் குதிக்கின்றனர். கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும்

இப்போராட்டத்தில் முதற் கட்டமாக பேராதனைப் பல்கலைக்கழகம் 82/83 கல்வியாண்டு விஞ்ஞான மாணவன் சுரேஷ், யாழ்ப்பாணத்தைத் சேர்ந்த செல்லத்துரை-கனகரத்தினம், மலையகத்தைச் சேர்ந்த ஆனால் வவுனியாவில் வசிக்கின்ற கருணாகரன் என்பவர்களும் 8-8-85 தொடக்கம் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நாங்கள் இருவர் இருவராக போராட்டத்தில் குதிக்கவுள்ளோம். இதற்கு ஆதரவாக பல்கலைக் கழகங்களும் போராட்டம் நடத்த வேண்டுமென சிறைக்கைதிகளாகிய ஏனையோரும் நாமும் எதிர்ப்பார்க்கிறோம். வெகுசனங்களும் போராட்டத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களை நடத்தவும். வேறு விசேடமில்லை முடிக்கிறேன்.

9-8-85 இவ்வண்ணம்.

..........................




ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் **ஈழ மாணவர் பொதுமன்றம்** பதித்த தடங்கள் மிகவும் ஆழமானவை.

''புரட்சிகரக் கட்சியில்லாமல் புரட்சி சாத்தியமல்ல' என்று தோழர் லெனின் கற்றுத் தந்தார். ஒரு புரட்சிகர தாபனத்திற்கு வெகு ஜனங்களுடன் தன்னை இறுக்கமாக இணைத்துக் கொள்வதற்கும், மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதற்கும் வெகு ஜன அமைப்புகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. வெகு ஜன அமைப்புக்கள் விரிவான மக்கள் திரளை தன்னுள் கொண்டிருப்பதால் இந்த வெகு ஜன அமைப்புக்கள் இல்லாமல் புரட்சிகர ஸ்தாபனம் தன்னை கெட்டிப்படுத்தவும், தனது விரோதிகளை எதிர்த்தபோராட்டத்தில் வெற்றிபெறவும் முடியாது.

தடை செய்யப்பட்ட நிலையில் சட்டவிரோதமாக இயங்கும் தலைமறைவு வாழ்க்கை நடத்தும் புரட்சிகர ஸ்தாபனம் எதிரி விட்டுவைத்துள்ளதும் மக்களின் போராட்டங்களால் கிடைக்கப் பெறுவதுமான ஜனநாயகஉரிமைகளை பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். சட்டவிரோதமான வேலைகளை சட்டபூர்வமானவேலைகளுடன்

— 4. பக்கம் பார்க்க...

ஈழ மக்கள் இடர் தீர ஈழ மாணவரே ஒன்றுசேரீர்!.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முதலாளித்துவ கல்விமுறையும் மாணவர்களும்.

நாம் மாணவர்கள். கல்வி எமது குறிக்கோள். எனவே எமக்கு கல்வி பற்றிய தெளிவு அவசியம். நாம் எதைக் கற்கிறோம்? ஏன்கற்கிறோம்? என்ற தெளிவின்றி கற்றுக் கொண்டு செல்வ தென்பதில் எந்தவித அர்த்தமுமில்லை எனவேஎமக்கு கல்வியென்றால் என்ன, அது எவ்வாறு உருவாகியது, அது எதற்காகப் பாவிக்கப்படுகிறது என்ற புரிதல் எமக்கு இருக்க வேண்டும். இதைச் சற்று தெளிவு படுத்தும் விதத்தில் கல்வியை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்குவோம்.

பருப் பொருட்களிலிருந்து சிந்தனை தோன்றுகிறது. சிந்தனை பருப் பொருட்கள் மீது செயற் படுத்தப்படும் போது அதை மாற்றியமைக்கிறது. இம் மாற்றம் புதிய சிந்தனையை தோற்றுவிக்கிறது. இதுமீண்டும் மீண்டும் இவ்வாறே தொடர்கிறது. இது சிந்தனையில் தோன்றும் வளர்ச்சி பற்றிய பொருள் முதல் வாதப்பார்வை.

பத்து லட்சம் வருடங்ளுக்கு முன் மனிதன் தனது குரங்கையொத்த மூதாதையிடமிருந்து நீண்ட நெடிய வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் விளைவாய் ஒரு புதிய உயிர்வகையாக பண்பில் மாறுபட்ட மனித இனமாகத் தோன்றினான். அன்றிருந்த மனிதன் மனித இனத்தின் குழந்தைப் பருவத்தில் இருந்தான். அவன் இயற்கையின் நுட்பங்களை அறிந்திருக்கவில்லை. காடுகள் வனாந்திரங்களில் அலைந்து திரிந்தான் ஆனால் அவனுக்கு சூழவுள்ள இயற்கையில் தேவையிருந்தது. அவன் உணவு பாதுகாப்பு இன்னபிற வாழ்க்கைக்கு அவசியமான தேவைகள் நிமித்தம் சூழ உள்ள இயற்கை மீது செயறபட்டான். இத் தொடர்ச்சியான செற்பாடுகள் அவனுக்கு பலவித அனுபவங்களைக் கொடுத்தன. இப் பல வகைப் பட்ட அனுபவங்களின் நீண்ட கால சேர்ப்புகள் அவனுக்கு புதிய அறிவுகளைக் கொடுத்தன இதனால் அவன் படிப் படியாக சூழ உள்ள இயற்கையை புரிந்து கொள்ளவும் சிறுகச் சிறுக அதை தனது நலன்களுக்குத் தக்க மாற்றியமைக்கவும் தலைப்பட்டான் அளவு ரீதியாக ஏற்பட்டு வந்த மாற்றங்கள் ஒரு கட்டத்தை எய்தும் போது பண்பு ரீதியாக மாறுகின்றன.

இம் மாற்றங்கள் அடுத்து வரப்போகும் புதிய மாற்றங்களுக்குவழி திறந்து விடுகின்றன இவ்வாறே மனிதன் இயற்கையில் தொழிற்படுவதும் அதிலிருந்து கற்பனைகளைப் பெறுவதும் அவற்றைக் கொண்டு மீண்டும் தொழிற்படுவதும் மீண்டும் புதிய கற்பனைகளைப் பெறுவதுமாக காட்டுமிராண்டி வாழ்க்கை நிலையிலிருந்து முன்னேறிய நாகரிகமடைந்த வாழ்க்கை நிலைக்கு மகமிக நீண்ட காலத் தொழிற்பாடுகளினூடாத மாறினான் இது மனித வரலாற்றின் (98%) தொண்ணூற்றெட்டுச்சத வீதத்திற்கும் அதிகமான காலமாகும். ஒவ்வோர் சின்னஞ்சிறிய கண்டுபிடிப்புகளும் தான் இன்றைய விஞ்ஞான உலகின் பிரமாண்டமானகண்டு பிடிப்புகள் அனைத்துக்குமான அத்தி வாரம். மனிதன் கருவிகளைக் கண்டு பிடித்து உற்பத்தியை நோக்கமாகக்கொண்ட உழைப்பில் ஈடுபட்டதுதான் மனிதனைவிலங்கு உலகிலிருந்து வேறு பிரித்து உன்னதமான ஓர் நிலைக்கு உயர்த்தியது. மனிதனின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் அதனை யொட்டி மனிதர்களிடையே உற்பத்தியை மையமாகக் கொண்டு ஏற்பட்ட உறவுகளும் (இவை உற்பத்திஉறவுகள் என அழைக்கப்படும்)மனித சமுதாயத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சிக் கட்டங்களில் வெவ்வேறு சமுதாய அமைப்புக்களை (உற்பத்தி முறைகளை) நிறுவின. இவ்வகையாக மனித இனம் தனது வரலாற்றில் ஐந்து வகையான சமுதாய அமைப்புகளை இது வரை தாண்டி வந்துள்ளது அவை ஆதிகால பொதுவுடமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சோசலிச சமுதாயம் ஆகியவை. நாம் இதுவரை ஆராய்ந்த சமுதாயம் ஆதிப் பொதுவுடமைச் சமுதாயமாகும். இங்கு உற்பத்திச் சக்திகள் (உற்பத்திச் சாதனங்களும், உழைப்புச்சக்தியும்) தாழ்ந்த மட்டத்திலிருந்தன.

வாழ்க்கை முறை எளிய கூட்டு வாழ்க்கையாகவும், உழைப்பு கூட்டு உழைப்பாகவும் உற்பத்திக் கருவிகள் சமுதாயத்தின் அனைவருக்கும் பொதுவானவையாகவும், உர்பத்தியின் விளைபொருட்கள் அனைவருக்கும் பொதுவானவையாகவும் விளங்கின. எனவே தான் இது ஆதிகால பொதுவுடமைச் சமுதாயமென அழைக்கப்படுகிறது இங்கு நாம் என்னத்தைக் காண்கிறோமென்றால் மனித இனம் தன் கடுமையான உழைப்பாலும் அனுபவங்களாலும் சிறுகச் சிறுக நீண்ட காலமாகச் சேமித்த அறிவுச் செல்வம் மொத்த மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்குமாகப் பாவிக்கப்பட்டது. அது யாவருக்கும் பொதுவானதாக விளங்கியது அதன் நோக்கம் இயற்கையின் ரகசியங்களை மேலும் புரிந்து கொள்வதும் அதை மனிதனுக்கு சேவைசெய்வனவாக மாற்றியமைப்பதுமே. ஆனால் பிற்பாடு என்ன நடந்தது. அடிமைச் சமுதாயத்தின் தோற்றத் தோடு அறிவின் ஒழுங்கு படுத்தப்பட்ட வடிவமான கல்வியின் தூயநோக்கம் மறைந்தது. அது சுரண்டும் வர்க்கங்களின் சுரண்டற் கருவிகளில் ஒன்றாக அவர்களால் மாற்றப்பட்டு சுரண்டலுக்கு சேவை செய்வதே கல்வியின் நோக்கம் என்பதாக ஆக்கப்பட்டுவிட்டது.

மக்களின் ஒரு பகுதியினர் பெரும்பான்மையான மற்றொரு பகுதியினரை பலவந்தமாக அடிமைகளாக்கி அவர்களைத் தனக்காக கட்டாய உழைப்பில் ஈடுபடுத்துவதன் மூலம் உழைப்பைச் சுரண்டி அவற்றின் விலை பொருட்களை உழைப்பிலே ஈடுபடாமலிருந்து கொண்டே அனுபவித்து வந்த கால கட்டமாக அடிமைச் சமுதாயம் உருவானது. இங்கு வாழ்க்கை முறை அடிமைகளையும், அடிமை உடைமையாளர்களையும் கொண்டதாகவும், உழைப்பு அடிமை உழைப்பாகவும், உற்பத்திகருவிகள் பொதுவானதாக அல்ல மாறாக ஒரு பிரிவினரான அடிமை உடைமையாளர்கட்கு மட்டுமே சொந்தமானதாகவும், உழைப்பின் விளை பொருட்கள் அவ்வாறே அடிமை உடைமையாளர்கட்கு மட்டுமே சொந்தமானதாகவும் விளங்கியது.

இதனால் தனது உழைப்பை மற்றொரு பிரிவினர் செய்வதால் அடிமை உடைமையாளருக்கு பெருமளவு நேரம் மிஞ்சியிருந்தது. இது அவர்கள் கற்பதற்கும், கலைகள், பொழுது போக்கு. போன்றவற்றில் ஈடுபடவும் வழி செய்து கொடுத்தது. இப்போ கல்வி யாவருக்கும் பொதுவானதாக இல்லாமல் ஒரு குறுகிய சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்த பிரிவினருக்கே உரித்தாகி விட்டது. இக்கல்வியை அவர்கள் தங்கள் சுயநலனுக்கானதாக மாற்றிக் கொண்டார்கள். இப்போ இது இரண்டு நோக்கங்களுக்காக உபயேகிக்கப்பட்டது ஒன்று இயற்கையின் விதிகளை கண்டறிந்து அவற்றைக் கொண்டு தங்களுக்குச் சேவை செய்யவும் அடிமைகளை மேலும் சுரண்டுவதற்கும், அவர்களின் உழைப்பில் இருந்து இன்னும் கூடிய விளைவுகளைப் பெற்றுக்கொள்ளவும், இதனால் தங்கள் செல்வங்களையும் வசதிகளையும் பெருக்கி கொள்வதற்கும் பயன்படுத்துவது, இரண்டு இதற்காக சுரண்டப்படும் அடிமைகளைத் தொடர்ந்தும் அடிமைகளாக வேஇருக்க செய்ய வழி செய்யவும், அவர்களது போராட்டங்களை ஒடுக்கவும் உபயோகிப்பது.

இது நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் மேலும் மோசமாகியது, இப்போது கலைகள் செழித்தோங்கி வளர்ந்தன. ஆனால் அவை அனைத்தும் சுரண்டலாளர்களைப் பாதுகாக்கவும், போற்றிப்புகழவும் செய்வனவாயின. சுரண்டலை நியாயப்படுத்தின. எகிப்தின் உலகப்புகழ் மிக்க பிரமிடுகள் நிறுவப்பட்டன வென்றால் ஒரு சில அரச பரம்பரையினரது புகழ் கூறும் ஞாபகச்சின்னங்களை எழுப்புவதற்காக உழைக்கும் மக்களுக்குக் கிட்டாத பெரும் தொகை செல்வங்கள் வீணே சமாதியாயின். அம் மக்களின் உழைப்புகள் பலவந்தமாக பிழிந்தெடுக்கப்பட்டன; அவை உண்மையில் அவ்வரசர்களால் அல்ல மாறாக முகம் தெரியாத உழைப்பாளிகளது சமாதியாகவே அமைந்தன. இது போல் இந்தியாவிலும் அரசர்களது கீர்த்தியையும் மகிமையையும் பறை சாற்றுவதற்காக கோடானுகோடி செல்வங்கள், அவை பாமரமக்களின் கடும் உழைப்பால் திரட்டப்பட்டவை, அவர்களுக்கு கிட்டாமலே செலவாகின கலைகள், இலக்கியங்கள், நீதிநெறிகள், ஒழுங்கு விதிகள், மதக் கோட்பாடுகள் யாவற்றினூடாகவுமே இச்சுரண்டல் அமைப்பையும் ஒடுக்கு முறைகளையும் நியாயப்படுத்த பகீரதப் பிரயத்தனங்கள் மேற் கொள்ளப்பட்டன.

ஒடுக்கு முறைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் சுரண்டலுக்கும் எதிரான புரட்சிகர கருத்துக்களும், எழுச்சி இயக்கங்களும் பலவந்தமான அரச ஒடுக்கு முறைகளால் நசுக்கப்பட்டன. இங்கே கல்வி இம் மோசமான கருத்துக்களைப் புகுத்தும் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டது. இது அறிவு இயற்கையின் இரகசியங்களைச் கண்டறிந்து தந்த விஞ்ஞான உண்மைகளைத் திரித்துத் தங்களுக்குச் சாதகமான கருத்துக்களாக மாற்ற முனைந்தனர். தங்கள் கருத்துக்களை அம்பலமாக்கக்கூடிய உண்மைகளை மூடி மறைக்கவும் அவற்றை ஏற்பவர்களை ''கடவுளுக்கு எதிரானவர்கள்'' என்று குற்றம் சாட்டி சிறையிலடைக்கவும் கொலை செய்து ஒழிக்கவும் செய்தனர். இதற்கான பல உதாரணங்களை நாம் எமது கடந்த வரலாறுகளில் காண முடியும்.

நிலப்பிரபுத்துவத்தின் தகர்வுடன் முதலாளித்துவ சமுதாயம் உருவானது மூலதனத்தைத் திரட்டுவது என்பது இவ்வமைப்பின் உயிர்நாடி. இக்கால கட்டத்தில்தான் நாம் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனினும் உலகில் சில பாகங்களில் இவ்வமைப்பு புரட்சிகளால் தூக்கியெறியப்பட்டு சோஷலிச சமுதாயங்கள் தோன்றிவருகின்றன. இப் போக்கு மேலும் மேலும் பெருகியபடியே செல்லுகிறது.





ஈழப்போரே இறுதித் தீர்வு' ஈழ மாணவர்களின் எழுச்சி ஊர்வலம்.

முதலாளித்துவம் தொழிற் புரட்சியுடன் உதயமானது. விஞ்ஞான அறிவை மேலும் சுரண்டுவதற்கும் பாவிப்பதற்கும் இது வழிசெய்து கொடுத்தது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு தங்குதடையற்ற மலிவானஉற்பத்தித்திறன்கூடிய உழைப்பும் சிறப்பான சந்தை வாய்ப்பும் அவசிய நிபந்தனைகளாக இருந்தன. இவற்றை ஈட்டிக்கொள்ள முதலாளித்துவ நாடுகள் பின்தங்கிய நாடுகளை கைப்பற்றும் காலனீயக் கொள்கையை மேற்கொண்டன இவற்றின் நாடுபிடிக்கும் போட்டியில் ஏற்பட்ட ஏகாதிபத்தியங்கட்கிடையிலான சண்டையே உலக மகா யுத்தங்களாகும். இம் முதலாளித்துவம் சர்வபொதுவான விஞ்ஞான அறிவை தனது சுரண்டலுக்கானதாக மாற்றி ஒரு குறுகிய வர்கத்தினது ஏகபோகமாக ஆக்கிக் கொண்டது. உயர்ந்த சுரண்டலைப் பெறுவதற்கு இது தொழிலாளிகளை ஓரளவிற்கு கல்விகற்க விடவேண்டிய அவசியத்தைக் கொண்டிருந்தது.

கொம்பியூட்டர்களையும், நவீன இயந்திரங்களையும் உற்பத்தி செய்து கொண்டபின் அவற்றை ஈடுபடுத்தி அதிகளவு உற்பத்தியையும் அதனால் அதிகளவு செல்வத்தையும் ஈட்டிக்கொள்வதனால் அவற்றை இயக்கவும் கையாளவும் அதிலீடுபடவேண்டிய தொழிலாளிகளுக்கு அதற்கான அறிவு தேவையல்லவா? மேலும் தனக்குச் சேவை செய்யக் கூடிய ஏனைய துறைகளை (மருத்துவம், பொருளாதாரம், சட்டம், இவை போன்றவை) நிரப்புவதற்கும் ஒருபகுதி மக்களுக்கு அதற்குரிய கல்வி வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும் முதலாளித்துவத்திற்கு தனது தொழில்களுக்குரிய தகைமை பெற்ற பெருமளவு தொழிலாளரை தேவைக்கு மிதமிஞ்சிய அளவில் உருவாக்கிவிட வேண்டிய அவசியமிருந்தது. அப்போதுதான் வேலையில்லாத பெருமளவு தொழிலாளர் பட்டாளம் தொழிற்சாலைகட்கு வெளியே தவமிருக்கும்'' அப்போதுதான் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகுறைந்த ஊதியம் வழங்கவும், அவர்கள் வேலை நிறுத்தங்களில் இறங்காமல் வைத்திருக்கவும் செய்ய முடியும். தொழிலாளர்களுக்கு எந்நேரத்திலும் தட்டுப்பாடு ஏற்படாமலும் இருக்கும், எனவே முதலாளித்துவம் தத்தமது நாடுகட்கேற்றபடி தனக்குச் சேவகஞ்செய்யும் தொழிலாளர்களின் வெவ்வேறு பிரிவினரை கீழ்ப்படிவுள்ள திறமைமிக்க ஊழியர்களாகவும் மூலதனத்தின் அடிமையாகவும், கருவியாகம் உருவாக்குவதற்காக கல்விக்கூடங்களைப் பயன்படுத்தியது.

இலங்கையின் முதலாளித்துவ அரசும் அதற்கு விதிவிலக்காக இல்லை; இன்று மாணவன் எதற்காகக் கல்வி கற்கிறான்? சமுதாயத்தை மேம்படுத்தும் அறிவுலங்களைப் புரிந்து கொண்டு அவற்றை முழுமையாக மக்களின் நலன்களுக்காகப் பாவிப்பதற்காகவா? இல்லை;. இந்தப் போட்டி நிறைந்த தொழிற்சந்தையில் தனக்கு வருவாய் தரும் ஏதோ ஒரு தொழிலை எட்டிப் பிடித்துக் கொள்ளுவதற்காக தனது உழைப்பு எங்கே செல்கிறது? யாருக்குப் பயன் படுகிறது என்ற கவலையின்றி

— 4ம் பக்கம் பார்க்க..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அன்புடன் பிடலுக்கு.

# அடைந்தால் தாய்நாடு இல்லையேல் வீரமரணம்

புரட்சிக் கனலுடன் சே.



பிடல்—

இக்கணத்தில் என் மனம், நாம் முதன் முதலில் மரியா ஏண்டோனியாவின் இல்லத்தில் சந்தித்த அந்த நாளை நோக்கிச் செல்கின்றது. நீங்கள் எவ்வாறு நம் பயணத்தினைப் பாங்குடன் முடிவு செய்தீர்கள். அதற்கான ஏற்பாடுகளை எவ்வளவு கஷ்டத்துடன் செய்து முடித்தீர்கள் என்பதைப் பற்றியெல்லாம் எண்ணுகிறது.

நம்மில் எவருக்கேனும் வீரமரணம் நேருமேயானுல் அது யாருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று ஒரு சமயம் வினு எழுப்பப்பட்டது. அப்போது தான் அதுவும் நடக்கக் கூடியதே என்றுணர்ந்து சற்றுத் திகைத்தோம். ஒரு உண்மைப் புரட்சியில் நிகழக்கூடியது வெற்றி அல்லது வீரமரணம் என்ற விழுமிய உண்மையை நாம் கற்றுக் கொண்டோம். நம் வெற்றிப் பாதையில் வீரர் பலர் சமாதி ஆனுர்கள்.



கியூபாவின் பாசறையில் பிடலும், சேயும்.

இன்று அவையெல்லாம் சாதாரண நிகழ்ச்சிகளாகத் தோன்றும் அளவுக்கு நாம் பக்குவப் பட்டுவிட்டோம் என்ருலும் அன்றைய அதே சூழ்நிலைதான் இன்றும் நாட்டில் நிலவுகிறது கியூபப் புரட்சியில் எனக்கிருந்த கடமைகளை ஓரளவுக்கு நிறைவேற்றி விட்டதாக உணர்கின்றேன் எனவே என் தோழர்களும், நானும், தங்களிடமிருந்தும், என் சொந்த சகோதரர்களாகிவிட்ட உங்கள் மக்களிடமிருந்தும் பிரியாவிடை பெற்றுப் பிரிகிருேம்.

கட்சித் தலைமை அமைச்சர்' மேஜர் ஆகிய பொறுப்புகளிலிருந்தும் விலகுகின்றேன். அத்துடன்கியூபக் குடிஉரிமை என்ற பெருமையையும் கைவிடுகிறேன் அலுவலக ரீதியாக அனைத்துத் தொடர்புகளையும்—நான் நினைத்தாலும் விட முடியாத வித்தியாசமான சில உறவுகளைத் தவிர—துண்டித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தை எண்ணும் போது கியூபப் புரட்சியின் வெற்றியை நிலைநாட்டுவதன் பொருட்டு நேர்த்தியாகவும், நேர்மையாகவும், உளமார்ந்த அர்ப்பணிப்புடனும் உழைத்திருப்பதை உணர்கின்றேன். சீயர்ரா மெய்ஸ்ட்ராவில் கழித்த முதல் சில விஞடிகளிலிருந்து இன்றுவரை நான் தங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கை ஆழம் வாய்ந்துள்ளது.

ஒரு தலைவர் என்ற முறையிலும், புரட்சிவாதி என்ற முறையிலும் தங்களின் நற்பண்புகளை முறையாகப் புரிந்து கொள்வதில் மிகவும் தாமதம் செய்துவிட்டேன் என எண்ணுகிறேன். இதுவே நான் செய்த கடுமையான தவருகப்படுகிறது. நான் குறிப்பிடத் தகுந்த ஒரு காலகட்டத்தில் எம் மக்களோடு வாழ்ந்திருக்கிறேன். இன்னல்களும். இடுக்கண்களும் எதிர் கொண்ட சூழ்நிலையில் அவர்களுடன் வாழ்ந்தமைக்காகத் தங்களுக்கு அடுத்தபடியாக நான் பெருமிதம் அடைகின்றேன்.

ஓர் அரசியல்வாதி என்ற முறையில் தங்கள் திறமை அரிய வகையில் அன்றும் இன்றும் ஒளி வீசுவதையும் அதற்காக நானும் சிறிதும் தயங்காமல் தோளோடு தோள் கொடுத்து நின்றதையும் எண்ணிப் பெருமை படுகின்றேன். நம் சிந்தனைகள் ஒத்த தன்மையாகவும் இருந்ததையும், நம் இலக்கை அடையும் முயற்சிகளில் வரும் அபாயங்கள், அதனை எதிர் கொள்ள வகுத்த கொள்கைகள் ஆகியவற்றில் இருவரும் ஒருமித்த கருத்துடையவர்களாக விளங்கியதை எண்ணி இரும்பூதடைகின்றேன்.

தற்போது உலகின் பிறபகுதிகளிலும் என் சின்னச்சிறு சேவைகள் தேவைப்படுகின்றன. கியூபாவின் பொருட்டு தாங்கள் பொறுப்பெடுத்திருப்பதால், தங்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு, எனக்கிருக்கிறது இங்கே நாம் பிரிய வேண்டிய தருணம் வந்துவிட்டதாகக் கருதுகிறேன்.

இந்த வேளையில் நான் இன்பமும் துன்பமும் ஒருங்கே அடைகிறேன் என்பதை நீங்கள் தவருமல் புரிந்து கொள்ள வேண்டுகிறேன், அன்பிற்கினியந்த மக்களையும், ஒளிமயமான நம்பிக்கையை உருவாக்கிய தங்களையும் விட்டுப் பிரிகிறேன். தங்களின் தலைசிறந்த மைந்தனுக என்னைக் கருதிய என் இனிய மக்களைப் பிரிகிறேன். நீங்கள் எனக்களித்த உத்வேகமான நம்பிக்கையையும் எம்மக்களின் புரட்சிப் பேராற்றலையும் மிகப்புனிதமான கடமையைச் செயல்படுத்துகிறேன் என்ற விழிப்புணர்வையும், ஆதிக்க மனப்பான்மை எங்கெல்லாம் தலைகாட்டுகின்றதோ அங்கெல்லாம் போராட வேண்டும் என்னும் தாகத்தையும், உடன் எடுத்துக் கொண்டு, புதிய போர்க்களத்திற்குச் செல்கிறேன் அவை என் தீர்மானத்தை வலுப்படுத்துகின்றன. என் உள்ளத்தின் வேதனையை நீக்கிப் பன்மடங்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

கியூபா மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர அதன் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் என்னை நானே விடுவித்துக் கொள்வதை மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். நான் நெடுந் தொலைவில் இருக்கும் போது என் இறுதி நாள் அருகி வருமாயின் அவ்வமயம் என் இறுதிச் சிந்தனைகள் யாவும் என் தாயகத்தினைப்பற்றி, குறிப்பாகத் தங்களைச் சுற்றியே வட்டமிடும். நீங்கள் எனக்குக் கற்றுத் தந்த படிப்பினைகளுக்காகவும், கற்ற நெறியில் நின்று என்னை மேலும் நின்று ஊக்குவித்தமைக்காகவும் நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவனுக இருப்பேன் அத்துடன், கடைசி வரை தங்களை எல்லையற்ற நம்பிக்கையுடன் பின்பற்றவே முயல்வேன் நமது புரட்சியின் வெளிநாட்டுக்கொள்கையில் என்னை எப்போதும் பார்க்கிறேன். அத்தொண்டினைத் தொடர்ந்திடவே விரும்புகிறேன். கியூபாவின் புரட்சிக்காரன் என்ற முறையில் எனக்குள்ள பொறுப்பினை. நான் உலகின் எப்பகுதிக்குச் சென்ருலும் செயல் மூலம் தவருமல் நிறைவேற்றுவேன். என் மனைவி மக்களைச் சொத்து சுகம் எதுவுமின்றி விட்டுசென்ற போதிலும் அதனுல் என் மனம் வேதனையடையவில்லை மாரு, மகிழ்ச்சி அடைகின்றேன். நான் அவர்களுக்காக எதையும் கேட்கவில்லை ஏனெனில் அவர்கள் வாழவும், கற்கவும் நம் தாயகம் உதவுமென்று உறுதியாக நம்புகிறேன்.

நான் எம்மக்களுக்கும். தங்களுக்கும் மேலும் பல கூற விழைந்தாலும் அது வீண் என்று கருதுகிறேன் ஏனெனில் நான் சொல்ல எண்ணுவதையெல்லாம் சொல்ல வார்த்தைகளால் முடியாது. எனவே மேலும் எழுதிக் காகிதத்தை வீணுக்க விரும்பவில்லை.

என்றும் நாம் வெற்றிக்காக—
அடைந்தால் தாய்நாடு, இல்லையேல் வீரமரணம்.
புரட்சிக்கனலுடன் தங்களை உளமாறத் தழுவுகின்றேன்.

—சே

தமிழில் - பொன்னுச்சாமி.



பிடல் சே

## பேராளிகளும் போர்க்குணமிக்க மாணவர்களும் குவேராவை சுவீகரித்துக் கொண்டார்கள்.

—சே_பற்றி பிடல்.

கொரில்லாவாக இருந்த நாட்கள் நெடுகிலும் தினமும் நேர்ந்த அனுபவங்களை தன் சொந்த டைரியில் குறித்துக்கொள்வது சேயின் வழக்கமாக இருந்தது...

அடர்ந்த கானகங்களில் தொல்லைகளுக்கு மத்தியில் உடமைச்சுமைகள் ஆயுதச்சுமைகளை சுமந்து செல்லும் நீண்ட பயணங்களில் காட்டு மரங்களுக்கிடையில் நீண்ட நாட்கள் நடந்த களைப்பின் இறுதியில் தங்க நேர்கையில் —ஆரம்ப நாள் தொட்டு நேசத்துடன் 'சே' என்றழைக்கப்பட்ட குவேரா—தனது நோட்டுப் புத்தகத்தை எடுத்து டாக்டருக்கேயுரிய அந்த நுணக்கமான பொடிப் பொடியான எழுத்தில் டைரி எழுதிக் கொண்டிருப்பார்.

சகமனிதனை மதித்தலும் மனசாட்சி சார்ந்த மனோ திடமும் ஒரு கொரில்லா வீரனுக்கு நிச்சயமானது என்பதை எப்போதும் வலியுறுத்தி வந்தார். 'சே' 'முதலில் கொல்லப்படுபவன் நானுகவே இருக்கட்டும்' என்று அடிக்கடி சொல்வார், அவ்வாறே வாழ்வை வீரனுகச் சந்தித்தார். அவா வார்த்தைக்கு மனச்சாட்சிக்கு அவரே உதாரணமாக இருந்தார்.

அமெரிக்க கறுப்பு விடுதலைப் போராளிகளும் போர்க்குணமிக்க மாணவர்களும் உத்வேகத்துடன் குவேராவைச் ஸ்வீகரித்துக் கொண்டார்கள். மனித உரிமைகளுக்காக நடத்தப்பட்ட போராட்டங்க்ள் அனைத்திலும் வியட்நாம் ஆக்ரமிப்புக்கு எதிராக நடந்த போராட்டத்திலும் ஸேகுவேராவின் உருவப்படங்கள் புகைப்படங்கள் கைகளில் ஓங்கி நின்றன.

வரலாற்றில் சில சமயங்களில் தான் இம்மாதிரி, சொல்லப் போனுல் வேறு எந்த மகாபுருசனும், எந்தப் பெயரும், எந்த உதாரணமும் இந்த அளவு பிரபஞ்ச ரீதியில் உலகு தழுவி அன்பின் ஆவேசத்துடனும் ஸ்வீகரித்துக் கெரள்ளப்படவில்லை என்றே சொல்லலாம்....

இன்றைய உலகமும் நாளைய உலகமும் கூட பிரதிநிதிப்படுத்தும் சர்வதேசீய ஆத்மீக உணர்ச்சியை அதன் உன்னதத்தில் அதன் பரிசுத்தத்தில் கொண்டிருந்ததாலேயே சே இந்த மாமனித நிலையை மேற் கொள்ள முடிந்தது...

பொலிவியன் டயரியிலிருந்து._ தமிழில் யமுனா ராஜேந்திரன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



GUES

ஈழ மாணவர் பொது மன்றம்

General Union of Eelam Students (GUES)

# ஈழமாணவர் குரல்

ஈழ மாணவர் பொது மன்றம் ஈழம் தழுவிய ரீதியில் அமைப்பு ரீதியான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செயல்பட்டபோது 1980களின் பிற்பகுதியில் தனக்கென ஒரு பத்திரிகையை வெளியிட முடிவெடுத்தது.

அங்கங்கே தன்னியல்பாக போராடிக் கொண்டும் போராட்ட எண்ணங்களுடனும் இருக்கின்ற மாணவர்களை அமைப்பு ரீதியாக இணைத்திடவும், அவர்களுடன் தொடர்புகளை பேணுவதற்கும், சரியான கருத்துக்களைப் பற்றிக் கொள்ளாமல் இருட்டில் தடுமாறும் மாணவர்களைத் தட்டி எழுப்பவும் 'ஈழமாணவர் குரல்' கிளம்பியது

புரட்சிகரப் போராட்ட நீரோட்டம் பொங்கி எழுவதை சமரச அணைகளால் தடுத்து நிறுத்த முயன்ற தமிழ் முதலாளித்துவ தலைமையின் வர்க்க நலன், புரட்சிகர சக்திகள் வளர்ந்தோங்குவதில் அதற்குரிய இயல்பான அச்சம், ஒடுக்கும் தேசத்து ஆளும் வர்க்கத்துடன் கூடிக் குலாவுவதில் அதற்கிருக்கும் இன்பம்......

இவற்றை மூடி மறைக்க அரசியல் தந்திரம், சாணக்கியம் என்ற சுலோகங்களை தூக்கிப் பிடித்தபடி அது தரித்திருந்த முழக்க முகமூடிகளை களைந்தெறியும் கடமையை **ஈழமாணவர் பொதுமன்றம்** ஏற்றுக் கொண்டது.

இதனால் ஈழ மாணவர் குரல் அரசியல் அம்பலப்படுத்தல்களை, முதலாளித்துவத் தலைமைக்கு எதிரான கண்டனங்களை வெளியிட்டது. இதனால் பரந்துபட்ட மக்கள் திரளை ஈழ மாணவர் பொது மன்றத்தின் கருத்துக்கள் சென்றடைந்தன.

பத்திரிகை வெளியிடுவதும் கூட்டம் போடுவதும், சுவரொட்டிகள் ஒட்டுவதும் வெட்டி வேலை அவர்கள் பசைவாளி தூக்கத்தான் இலாயக்கு என்று ஏளனம் புரிந்தவர்கள், எமது நேர்மையை, ஈழ விடுதலை மீதான விசுவாசத்தை சந்தேகித்தவர்கள் மத்தியில் புரட்சிகரத் தத்துவத்தின் துணையுடன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையில் நாங்கள் பீடு நடை போட்டோம்.

இன்று **ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்** உறுப்பினர்களாக இருக்கின்ற பல தோழர்கள் ஈழ மாணவர் பொது மன்றத்தில் வேலை செய்தவர்கள். இன்னும் பலர் ஈழ மாணவர் பொது மன்றம் ஊடாக வளர்த்தெடுக்கப்பட்டவர்கள்.

திருப்பங்களையும், முன்னேற்றங்களையும் அடைந்துவரும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் மாணவர்களின் பங்கு மேலும்மேலும் காத்திரமானதாக்கப்பட ஈழமாணவர் பொதுமன்றம் இன்னும், இன்னும் விரைவாகவும், பலமாகவும் மாற வேண்டியிருக்கிறது.

ஈழமாணவர்கள் உயர்கல்வி கற்றுக் கொண்டிருக்கும் தூரதேசங்களிலும் அது தனது கிளைகளைப் பரப்பி மாணவர் திரளை தன்னுள் ஈர்க்க வேண்டி இருக்கிறது.

இந்த நேரத்தில் வருடங்கள் சிலவாக பல்வேறு வேலைப்பளுவால் நின்று போயிருந்த **'ஈழமாணவர் குரல்'** மீண்டும் வெளிவரத் தொடங்கியிருக்கிறது.

**'ஈழமாணவர் குரல்'** தொடர்ந்து வெளிவர ஈழமாணவர்கள் தம்து பங்களிப்பை வழங்கவேண்டும். தாமும் ஆக்கங்களையும், விமர்சனங்களையும் தந்து பங்கு கொள்ள வேண்டும்.

**''நாளைய உலகம் நமக்கே சொந்தம்''**

## "தூக்கிய துப்பாக்கிகளின் வேலை முடியவில்லை. ஆயுதங்கள் அனைத்தும் ஆயத்தமாகவே உள்ளன"

**தோழர் பத்மநாபா ஈழமக்களுக்கு விடுத்துள்ள செய்தி**



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகமிட்டி செயலாளர் நாயகமும், மத்திய கமிட்டி அரசியல் பீடத்தின் தலைவரும், ஈழமக்கள் புரட்சிகர இராணுவக் கமிஷனின் தலைவருமான

தோழர் **க. பத்மநாபா**


தோழர் **க. பத்மநாபா** ஈழ மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் ஈழ விடுதலை அமைப்புக்கள் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என ஈடுபடுமாயின் கடந்த காலத்தில் தமிழ் பாராளுமன்ற அரசியல் வாதிகள் நடந்து கொண்ட முறைபோல் இருக்காதா எனச் சிலர் கேட்கக்கூடும். ஆனால் இது ஒரு **தற்காலிக போர் நிறுத்தம்** மட்டுமே என்பதையும், நாமோ நமது சகோதர அமைப்புக்களோ ஆயுதங்களை கீழே போடவில்லை என்பதையும், எம்மிடம் உள்ள ஆயுதங்களுக்கு தற்காலிக ஓய்வு மட்டுமே கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெளிவாக வலியுறுத்துகிறேன். சிறீலங்கா அரசு இந்த இடைக்காலத்தில் தன்னை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கியிருப்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. ஆனால் நாமும் எம்மை அனைத்து வழிகளிலும் பலப்படுத்திக்கொள்ளவும், இக்காலகட்டத்திற்குரிய வேலைத் திட்டங்களில் ஈடுபடவும் முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**எமது போராட்டத்திற்கு எதிரான சில தீய சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லவர்கள் போல் நடித்து உங்கள் சிந்தனையை குழப்பக்கூடும்.** அவ்வேளைகளில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாகவும், விழிப்போடும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


எமது இலக்கை அடையும் வரை எமது பயணம் முடியப் போவது இல்லை. இவ்வாறு தனது செய்தியில் குறிப்பிட்டுள்ள தோழர் **பத்மநாபா** வரையறுக்கப்பட்ட கால இடைவெளிக்குள் சிறீலங்கா அரசாங்கம் தான் ஒத்துக் கொண்டபடி ஈழ மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வை முன்வைத்து நடைமுறைப்படுத்த தவறுமாயின் எமது ஆயுதம் போராட்டம் முன்பை விடவும் முனைப்படையும் என்று உறுதியாக அறிவித்துள்ளார்.

# அமைப்புச் செய்திகள்

## நிக்காரகுவாவில் ஆக்கிரமிப்புக்கெதிரான




## ஆர்ப்பாட்டம்




★ நிக்காரகுவா புரட்சி நீடுழி வாழ்க

★ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்
ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடிப்போம்

★ அமெரிக்க ஏகாதிபத்தியமே!
நிக்காரகுவாவும் ஈழமும் மற்றிரு வியட்நாம்கள்



புரட்சிகர நிக்காரகுவா மக்களுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S.) நடத்திய ஆர்ப்பாட்டம்.

# இரத்த ஜீலை




ஈழமாணவர் பொதுமன்றமும் (GUES) தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் (SOLT) கோவையில் இணைந்து நடத்திய இரத்தஜூலை நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஈழமணி (EPRLF) உரையாற்றுகின்றார்.

# சர்வதேச மாலை

★ International Evening




ஈழ மாணவர் பொது மன்றத்தின் இலண்டன் கிளையினர் '' சர்வதேச மாலை '' எனும் நிகழ்ச்சியை நடத்தினர். பாலஸ்தீன மாணவர் பொதுமன்ற (GUPS) பிரதிநிதி உரையாற்றுகிறார். இதில் சர்வதேச விடுதலை இயக்க பிரதிநிதிகளும், முற்போக்கு, ஜனநாயக இயக்கங்களும் பங்கு கொண்டன.

**கற்கும்போது போராடுவோம் போராடும்போதே கற்போம் !.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்